# ஒவ்வொரு நாளும் ஒரு சிந்தனை



அமரர்

ஆறுமுகம் சிவஞானச்செல்வம்

அவர்களின்

# சிவஞான ஒளி

**15-10-2015**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# ஒவ்வொருநாளும் ஒரு சிந்தனை



முட்கொம்பன் பூநகரியை சேர்ந்த

**அமரர் திரு ஆறுமுகம் சிவஞானச்செல்வன்**

அவர்களின் சிவபதப்பேறு குறித்த 45ம் நாள்

# நினைவு மலர்

**15-10-2015**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது இனிய தெய்வத்திற்கு
# விழிநீர்ச் சமர்ப்பணம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவான்
என்ற வள்ளுவர் வாக்கிற்கமைவாக வாழ்வாங்கு
வாழ்ந்து அன்பைச் சொரிந்து, அறிவை ஊட்டி,
பண்பை வளர்த்து அன்புத் தெய்வமாக
எங்கள் மனங்களில் என்றும் குடிகொண்டிருக்கும்
எங்களது குடும்பத் தலைவனின் ஆத்மா சாந்திக்குப்
பிரார்த்தித்து இந் நினைவு மலரை அவரின்
பாதக் கமலங்களில் சமர்ப்பணம் செய்து
வணங்குகிறோம்.

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45ம் நாள் நினைவு மலர்



மலர்வு
17-07-1954

உதிர்வு
01-09-2015

அமரர்

## ஆறுமுகம் சிவஞானச்செல்வம்

முட்கொம்பன்-பூநகரி

### திதி நிர்ணய வெண்பா

ஆண்டு மன்மத மதில் ஆனதொரு ஆவணி பதினைந்தில்
பூண்டதொரு அபரபட்ஷ திருதியையில்-நீண்டபுகழ்
சிவஞானச் செல்வம் எனும் நற்புகழோன்
அமரத்துவமடைந்த நன் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

அப்பநீ யம்மைநீ யையனும் நீ
யன்புடைய மாமனு மாமியுநீ
ஒப்புடைய மாதரு மொண் பொருளுநீ
யொருகுலமுஞ் சுற்றமுமோ குருநீ
துய்ப்பனவு முய்ப்பனவுந் தோற்றுவாய் நீ
துணையாயென் னெஞ்சந் துறப்பிப்பாய் நீ
இப்பொன்நீ யிம்மணிநீ யிம்முத்து நீ
யிறைவநீ யேறூர்ந்த செல்வநீயே.

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்(று) இலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்(து) அரசே
திருப்பெருந் துறைஉறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்கெடுத்(து) உரைக்கேன்
ஆண்டநீ அருள்இலை ஆனால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன்(று) அருள்புரி யாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வத் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன் அடியோ
முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே யுருவமாகி
அற்புதக் கோல நீடி யருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம்பலத் துணின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் ஆறுமுகம் சிவஞானச்செல்வம் அவர்களின் வாழ்க்கைச் சுருக்கம்

நெல் விளைந்து புகழ் பரப்பும் பூநகரி,நல்லூரில் அறுமுகம் பாக்கியம் தம்பதியினருக்கு மூத்த புதல்வனாக 17-07-1954ல் சிவஞானச்செல்வம் வந்துதித்தார். காலச் சூரியனின் ஒளியும் அழகும் போன்றே சிவஞானத்தின் அழகும் எல்லோரையும் கவர்ந்தது. சிவஞானம் மூன்று அழகிய தங்கை மாருடனும் ஐந்து எழில் நிறைந்த தம்பிமாருடனும் துள்ளி, மகிழ்ந்து விளையாடி வளர்ந்தான்.

தனது ஆரம்பக் கல்வியை கிளி/பூநகரி நல்லூர் மகாவித்தியாலயத்தில் கற்றுத் தேறினான். அப்பொழுது அந்தப்பாடசாலை அ.த.க.பாடசாலையாக தரம் ஐந்துவரை மட்டமே இருந்தாலும்,விவசாயம் செய்யும் தன் தந்தையின் சிரமங்களையும் அவதானித்த சிவஞானம் தனது பள்ளிப்பருவத்திலேயே தனது தந்தையின் விவசாயப் பொறுப்புக்களைத் தான் கவனிக்கத் தொடங்கியதோடு, விவசாயத் தொழிலை நல்லதொரு தொழில் நுட்பக் கலை போல கையாளத் தொடங்கினான்.

அடர்ந்த காட்டின் மத்தியிலே ஒரு குளம் அந்தக் குளத்தை மையப்படுத்தி விவசாய நடவடிக்கை மேற்கொண்டால் உயர்வடையலாம் என்ற சிந்தனை அந்த மிக இளவயதிலேயே சிவஞானத்தின் மனதில் தோன்ற அதன் அடிப்படையில் உருவாகியதே முக்கொம்பன் என்னும் அழகிய ஊர். முக்கொம்பனின் முதுகெலும்பு சிவஞானம் அந்த விவசாய நிலங்கள் அனைத்திலும் வித்தியாசமான விளைச்சலை விளைவிக்கும் ஆற்றலை வளர்த்துக் கொண்டவர் சிவஞானம்.

நல்ல விவசாய இளைஞனாக மட்டுமின்றி விளையாட்டு வீரனாகவும் பூநகரிப் பிரதேசத்தில் சிறந்த சைக்கிள் ஓட்ட வீரராகவும் திகழ்ந்து பல பரிசில் களைப் பெற்று பூநகரிப் பிரதேசத்திற்கே பெருமை தேடியவர் சிவஞானம்.

வாலிபத்தின் வசந்தம் சிவஞானத்தின் அழகு பலரைக் கவர்ந்தது அவ் வாறே பூநகரி-ஆலங்கேணியைச் சேர்ந்த குமாரசாமி அன்னலட்சுமி தம்பதிகளின் ஆறு ஆண்மக்கள் மத்தியில் ஓரே ஒரு பெண் மகவாகப் பிறந்த கமலேஸ்வரியையும் (கலா) கவர்ந்தது 1984ம் ஆண்டு சிவஞானம் திருமண பந்தத்தில் இணைந்தார். கண்ணை இமைகாப்பது போல் தாய், தந்தை,தனது சகோதரங்களை எப்படிக் கவனித்தாரோ அவ்வாறே தனது மனைவியையும் அன்பாக அரவணைத்துக் கவனித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானச்செல்வம்,கமலேஸ்வரி என்னும் அன்புத் துணைவியுடன் இல்லறம் நடாத்தி மூன்று ஆண்குழந்தைகளையும்,இருபெண் குழந்தைகளையும் பெற்றெடுத்து பேணிவளர்த்து கல்வி அறிவூட்டி பெண்மகவு இருவரில் மூத்த மகள் கௌசல்யாவுக்கு அவுஸ்ரேலியா நாட்டில் வாழும் கிருதாப்பை (சங்கர்) மணமகனாக பதிவுத் திருமணம் செய்து வைத்தார். (திருமண எழுத்து) சிவஞானம் குடும்பத்தின் கடமையை மட்டுமன்றி தமது குலதெய்வ வழிபாட்டையும் குறைகளின்றி வாரம் வாரம் மலர் தூவி மனம் கசிந்து வழிபட்டு வந்தார்.

தினந்தோறும் காலை நான்கு மணிக்கு நித்திரை விட்டு எழுந்து கொள்வதும் நேரம் தவறாது கடமைகள் செய்வதும்,அவற்றில் குறிப்பிடக் கூடியளவு தோட்டத்திற் குள் நுழைந்து பயிர் கொடிகளுக்கு நீர் பாய்ச்சுவது மரக்கறிகளை ரசித்துப் பிடிங்கி வழமையான கடைக்கு கொடுப்பது ஒருநாள் கூடத் தவறாது பெற்றோர் வீட்டுக்கு சென்று பெற்ற தாயையும் தந்தையையும் பார்த்து வருவது சிவஞானத்தின் வழக்க மான செயற்பாடாகும்.

01-09-2015 அன்றும் வழக்கம் போன்று அதிகாலை நான்கு மணிக்கு துயில் எழுந்து தோட்டத்துப் பயிர் கொடிகளுக்கு நீர்பாச்சி மரக்கறிகளைப் பிடுங்கி வழமை யான கடைக்கு கொண்டு சென்றார். செல்லும் வழியில் பெற்றோர் வீட்டுக்குச் சென்று பெற்றோரைப் பார்த்து பரவசமடைந்த பின்பே கடைக்குச் செல்வதே வழக்கம் ஆனால் 01-09-2015 அன்று மட்டும் வழக்கத்திற்கு மாறாக பெற்றோர் வீடு செல்லாது கடை நோக்கிச் சென்றார். சின்ன வயதில் இருந்தே நன்றாக மோட்டார் சைக்கிள் ஓடும் ஆற்றலும் நல்ல அவதானமும் உள்ள சிவஞானம் சீரான வேகத்தில் அவதானத்துடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த போதிலும் விதியின் விளையாட்டால் வாகன விபத்துக்குள்ளாகி வாழ்க்கையெனும் நதியோட்ட த்திற்கு இறுதி முற்றுப் புள்ளி வைத்தார்.

- சுபம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றியாளர்கள் பலரும்
எதிலும் நல்லதே காண்பவர்கள்
தங்கள் கருத்துக்களை நேசிப்பவர்கள்.
தங்களை ஆபத்துக்குட்படுத்திக்
கொள்ளத் தயங்காதவர்கள் அவர்கள்
அவர்களுடைய மனதில்
தோல்விக்கு இடமேது?
தன்னம்பிக்கை உண்டே ஏராளமாய்.



கையில் வாய்ப்பிருந்தும்
ஆயத்தப்படாமல்
இருப்பதை விட,

வாய்ப்பில்லாத நிலையிலும்
ஆயத்தமாய் இருப்பது சிறந்தது

ஏனெனில், வாய்ப்பு
அறிவித்துக் கொண்டு
வருவதில்லை.



ஒழுங்கற்ற,
அடைசலான இடத்தில்
இருந்துகொண்டு
எப்படி ஒழுங்கும்
திறமையும் உள்ள
மனதைப் பெறுவது?

இடநிர்வாகமும் முக்கியம்,
நேர நிர்வாகத்தைப் போல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை
மகிழ்ச்சியளிக்காவிடில்
வாழ்க்கையில் மகிழ்ச்சியேது!
மிகச்சிறந்த
ஆட்டக்காரர்களுக்கு
விளையாட்டில் மிகிழ்ச்சி!
இசையில் தேர்ந்தவர்களுக்கு
இசைப்பதில் விருப்பம்!
சாதனையாளர்களின் மகிழ்ச்சி
அவர்களுடைய
சாதனையில் இருக்கிறது!



அறிவாற்றலின் பயன்
அரிதாகவே
இனங் காணப்படுகிறது
அது,
கடின காரியங்களையும்
எளிதாக்கும் திறன்.



உயிரோட்டமுள்ள
மரத்தைப் போன்றது
உயரிய கருத்துக்கள்!

அவை
ஆழ வேரூன்றி
வளர்ச்சிக்கும்,
மாற்றத்துக்கும்
உரியதாயிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்களுடைய
எண்ணங்களையும்,
உணர்வுகளையும்
கவனத்தில் கொண்டு
தன்னுடைய
எண்ணங்களையும்,
நம்பிக்கைகளையும்
வெளிப்படுத்தும் திறனே
முயற்சி என்பது



சட்டங்கள்
சாந்தமாயிருந்தால்
அரிதாகவே
கீழ்ப்படிதல் இருக்கும்!

கடுமையாயிருந்தால்
அரிதாகவே
செயல்படுத்தப்படும்!



சரியான சிந்தனை
முறையாகத் தொடுக்கும்
தாக்குதலை
எந்தப் பிரச்சினையாலும்
தாக்குப் பிடிக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிஷ்டம் என்பது
சரிசெய்யும்
அறிவைக் கொண்டு
உழைப்பது ஆகும்.



("Luck" என்ற சொல் பல சொற்களின்
முதல் எழுத்தக்களைக் கொண்டு
அமைக்கப்பட்ட சொல் ஆகும். [Acronym])
L - ABORING U - NDER C - ORRECT K - NOWLEDGE

நீங்கள் எதையெல்லாம்
செய்து முடித்தீர்கள்
என்பதைக் கொண்டு
உங்களை மதிப்பிடாதீர்கள்.
ஆனால்,
உங்கள் திறமையைக்
கொண்டு எதையெல்லாம்
செய்திருக்க முடியும்
என்பதை எண்ணிப் பாருங்கள்.



தன் கைகளைக் கொண்டு
செயல்படுகிறவன் தொழிலாளி!
தன் கைகளோடு மூளையையும்
பயன்படுத்துகிறவன்
கைவினைஞன்!
ஆனால்,
தனது கைகள்,
மூளை இவற்றுடன் -
இதயத்தையும் கொண்டு
செயல்படுகிறவனே கலைஞன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் எதைச் செய்வது
எப்போது செய்வது,
செய்கிறவற்றில் உங்களுக்கு
விருப்பம் உண்டா, இல்லையா?



உங்களை இவற்றில்
ஒழுங்குசெய்து கொள்ளுங்கள்.
உங்கள் வெற்றிக்கு
அதுவே உத்தரவாதம்.

---

பெற்றோர்களைக் காட்டிலும்
ஆசான்களே அதிக மரியாதைக்குரியவர்கள்!
பெற்றோர்கள் கொடுத்தது உயிரைத்தான்!
கற்பிக்கிறவர்களோ வாழும் கலையை
அல்லவா வழங்கியிருக்கிறார்கள்!



---

மவுனமே ஆற்றல்மிக்க வார்த்தை!
பேச்சுத்திறமை உடையவர்களால்
அதைக் கவனித்துக் கேட்க இயலும்!
அதன் நோக்கத்தையும்,
உட்கிடையான அர்த்தத்தையும்
அவர்கள் புரிந்துகொள்வார்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் மதி நுட்பம்
உடையவராயின்
திருமணம்
செய்து கொள்கிறபோது
பணத்தை விட நபருக்கும்,
அழகைவிட நற்பண்புக்கும்,
உடலைவிட மனதுக்கும்
முக்கியத்துவம் அளிப்பீர்கள்



செல்வம் திறமையைக்
கொடுப்பதில்லை.
ஆனால் -
திறமை செல்வத்தைக்
கொண்டு வருவதோடு
மனிதர்களுக்குத்
தனிப்பட்ட முறையிலும்,
சமுதாயத்திலும்
மகிழ்ச்சிக்குரியவற்றைக்
கொடுக்கும்.



காலம் எடுத்துச் செல்கிறது
ஒன்றிய சிந்தனை உட்பட
எல்லாவற்றையும்......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றத்துக்கான
சமயங்களில்
கற்றுணராதவர்கள்
மண்ணுலகின்
வாரிசாகிறார்கள்!



கற்றுத் தேர்ந்தவர்களோ,
அதுவரை இருந்திராத
ஓர் உலகிற்குத்
தங்களைத் தயார்படுத்திக்
கொள்கிறார்கள்.

நன்னடத்தை
உள்ளவர்களுடன்
இணைந்திருங்கள் -
உங்கள் நடத்தையும்
மேம்படும்.



தகுதியானவர்களுடன் செயற்படுங்கள் -
தகுதிமிக்கவராவீர்கள்.

எந்தக் கனவும் -
அதை நனவாக்குவதற்கான
திறனோடுதான்
உங்களுக்கு வழங்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருதுகளைப் பெறுவதால்
வருவதல்ல மதிப்பு - ஆனால்
அவற்றை பெறுவதற்கான தகுதி
இருக்க வேண்டும் உணர்வில்



வாழ்வென்னும்
வெகுமதியை
கடவுள் நமக்கு
வழங்கியிருக்கிறார்.
நம் வாழ்தலைப் பொறுத்தே
அது மகிமையடைகிறது.



வம்பளப்பு ஆசாமிகளைப்
பக்கத்தில் வரவிடாதீர்கள்.
அவர்கள்
இரகசியம் காப்பதுமில்லை.
நீங்கள் அவர்கள் மீது வைக்கிற
நம்பிக்கையைக்
காப்பாற்றிக் கொள்வதுமில்லை.



குற்றமே காண்கிற நிர்வாகம்
தவறுகள் நேரிடுகிறபோது
துணிவுடன் செயல்படும்
திறனையே
தொலைத்துக் கட்டிவிடும்.

நாம் வளர்ச்சியடைய
வேண்டுமெனில்
தொடங்கும் திறனுடைய பலரை
நம்முடன் வைத்திருப்பது முக்கியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே ஒரு நாள் போதும்
நம் ஆற்றலைச்
சற்றே கூட்டிக்கொள்வதற்கு
ஒவ்வொரு நாளும் பாதிக்கும்
அதன் பின்னே வரும் நிகழ்வுகளை
இன்று என்பது
வாழ்வின் திருப்புமுனை
இதில் - நாம் செய்து முடிக்கிற
செயல்கள், சந்திக்கிற நபர்கள்
நம் செயலின் போக்கு - இவை
விளைவுகளைக் கொண்டிருக்கும்,
எதிர் காலத்தின் அடியாழத்திலும்.



கடின உழைப்பு
இல்லாவிடில்
வாழ்க்கை
எதையும் கொடுக்காது
மனிதர்களாகிய நமக்கு



உங்கள் தற்போதைய
வழிமுறைகளுக்கேற்ப
ஆசைகளின் அளவைக்
குறைத்துக் கொள்ளுங்கள்!
உங்கள் வழிமுறைகள்
இடமளித்தால் மட்டுமே
ஆசைகளின் அளவை
அதிகரித்துக் கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பவர்களை விட
இல்லாதவர்களுக்குத்தான்
அதிகாரம் குடியாட்சியில்!



காரணம் -
அவர்களிடம் இருக்கிறது
பெரும்பான்மை!

பெரும்பான்மைக்கே
உண்டு அதிகாரம்.

---

இழந்த செல்வத்தை
ஈடுகட்டிவிடும் உழைப்பு!
இழந்த அறிவை
மீட்டுத் தரும் படிப்பு!
இழந்த உடல் நலத்தைச்
சீர்செய்யும் பண்பு நலன்
அல்லது மருந்து!
ஆனால்
ஒரு முறை இழந்த நேரம்
இழக்கப்பட்டதுதான்,



---

சின்னத் தவறுதான்,
ஆனால் -
நீங்கள் மறைக்க முயன்றால்,
அது வளர்ந்து
விசுவரூபமெடுத்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றியாளர்கள்

மகிழ்ச்சி தரும்
விளைவுகளில்
அக்கறை காட்டுகிறார்கள்.



தோற்பவர்களோ
மகிழ்ச்சி தரும்
செயன்முறைகளில்
அக்கறை கொள்வார்கள்

வாழ்க்கை

எளிதானது தான் - நாம்
வாழ்ந்து பார்க்கிற போது!



அது
நோக்கம், நேர்மை,
முயற்சி, மரியாதை
மற்றும்
கவனத்துடன்
வாழப்பட வேண்டியது

வீட்டுக்கு வெளியே

ஒரு வீடு
நீங்கள்
வேலை பார்க்கிற இடம்



அதை நேர்த்தியாய்
வைத்துக் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுடைய
மிகச்சிறந்த
திறமைக்குச்
சவாலாகக் கூடிய
ஒரு குறிக்கோளை
வாழ்க்கையில்
கண்டடையுங்கள்



ஒவ்வொன்றும்
மகிழ்ச்சியளிப்பதே -
சூரிய ஒளியில் உவகை
மழையில் புத்துணர்ச்சி!
காற்றில் உண்டாகும் சிலிர்ப்பு
பனி மூட்டத்தில் கிளர்ச்சி!



நல்ல அறிவுரை வழங்குவது,
அல்லது
சரியான பாதையில் குழந்தைகளைச்
செலுத்தவது - இவையே
பெற்றோர்களால் முடியக் கூடியது!
ஆனால்,
தன் சிறப்பியல்பை ஒருவன்
உருவாக்கிக் கொள்வதென்னவோ
அவனுடைய சொந்தக்
கைகளில்தான் இருக்கிறது.



அறிவை விட
அனுகூலமான கருவி
எதுவும் இல்லை!
அறியாமையைவிட
கெடுதலான பகை
எதுவும் இல்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் சமர்ப்பணம்

மலர்வு 1954 . 07 . 17



உதிர்வு 2015 . 09 . 15

நல்லூர் பூநகரியை பிறப்பிடமாகவும்
முக்கொம்பன் பூநகரியை வதிப்பிடமாகவும்
விளாத்திக்காடு நரசிம்மர் வைரவ ஆரைய பூசகருமான

## அமரர் ஆறுமுகம் சிவஞானச்செல்வன்



விழிகள் கரைகிறது
வேதனை நெஞ்சை முட்டுகிறது
ஓடி ஓடித் திரிந்து உலாவிய
இதயம் நிரந்தரமாய் உறங்கியதேன்
உம்பிரிவின் துயரச் செய்தி கேட்டு
ஒரு கணம் ஸ்தம்பித்துப் போனது நம்மிதயம்
பொய்யாகிப் போகாதோ நாமறிந்த இச் செய்தி
உம் பாசத்தால் கவர்ந்த உள்ளங்கள்
கண்ணீரில் மிதப்பதை தவிர்க்க ஒரு
கணம் மீண்டும் கண்திறக்கமாட்டீரோ...

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும். உற்றார் உறவினருக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன்
அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி ஓம்சாந்தி ஓம்சாந்தி!!!**

உங்கள்பிரிவல் துயறுரும்
ஆலைய பரிபாலன சபை
விளாத்திக்காடு நரசிம்மர் வைரவ ஆரையம்

சிவா பதிப்பகம். 05, கனகபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி...!

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 1954 | | 2015 |
| – | | – |
| 07 | | 09 |
| – | | – |
| 17 | | 01 |



நல்லூர் பூநகரியைப் பிறப்பிடமாகவும் முட்கொம்பனை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

## ஆறுமுகம் சிவஞானச்செல்வம்

பாசத்தின் உறைவிடமே
பண்பின் ஒளிவிளக்கே
உற்றவர் சுற்றமும்
கூடிக் களித்த உறவுகளை
கைவிட்டுச் சென்றதேனோ
பிரிவால் வாடி நிற்கின்ற உள்ளங்கள்
தேற்ற மொழியின்றி
தவிக்கிறதே – நின் உறவின்
அடிதேடித் துடிக்கிறதே.....


இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மதன் பல்பொருள் வாணிபம்
மச்சான் குடும்பத்தினர்
( கு.சுப்பிரமணியம்)
முட்கொம்பன் , பூநகரி.

வேழன் பதிப்பகம், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மண் மடியில்
17-07-1954

விண் மடியில்
01-09-2015

# கண்ணீர்ப் பூக்கள்.!

பெற்றவருக்கு நல்ல மகனாய்
பிறகு அடைந்தவளுக்கு நல்ல கணவனாய்
பிள்ளைகளுக்கு நல்ல தந்தையாய்
உற்றவர்க்கு நல்ல நண்பனாய் - இன்று
உலகத்தை விட்டு அமரனாய்...
மற்றவரும் மனம்விட்டுப் பேசும்படி
மனைவியுடன் நீ வாழ்ந்தாய்
போய் விட்டீரோ - நீர்
போனாலும் போகாதையா உன் புகழ்
தேனாகச் சொட்டும் தெரிந்த நாள் வரை.....

இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் இவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

முட்கொம்பன் கிராம
கால்நடை பண்ணையாளர் சங்கம்

அமரர்
## ஆறுமுகம் சிவஞானச்செல்வம்

# விழிநீர்க் காணிக்கை

மலர்வு
17.07.1954



உதிர்வு
01.09.2015

நேற்றுவரை நீர் பேசிய வரிகள்
காற்றுள்ளவரை கரையாது - எம்
ஊரின் உன்னத பயணத்தில் - உம்
தடம் காரிருளில் கைவிளக்குப் போன்றது.

பிறந்தார்க்கு இறப்புண்டு நிச்சியம் - ஆனால்
மறவாது இவ்வுலகம் உமையென்றும்,
மறையாது உம் நாமம் - நம் ஊரில்
கறையில்லா உமதன்பு மறுபிறப்பிலும்
கிடைத்திட வேண்டும்.

எமது கல்விநிலையத்தின் மாணவியாகிய
சி. கௌசிகாவின் அன்புத் தந்தையாகிய
அமரர்

## ஆறுமுகம் சிவஞானச்செல்வம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன்
அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**M.E.C**
முக்கொம்பன் கல்விநிலையம்
முக்கொம்பன், பூநகரி
நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு

08.05.1954

இறப்பு

01.09.2015



## அமரர் ஆறுமுகம் சிவஞானச்செல்வம்

மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்ல முன்னை நாள் பணியாளர் திருமதி கௌசல்யா
அவர்களின் அன்புத் தந்தையார்
அமரர் திரு. ஆ. சிவஞானச்செல்வம் அவர்கள் 01.09.2015 அன்று செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

நெஞ்சைவிட்டகலா நேசமகனே
பாரினிலே என்றென்றும் பசுமரமாய் நிறைந்திருப்பாய் என்றெண்ண
காலனவன் கணக்கிட்டு கடமையாற்றும்
உத்தமன் போல் –உம்
இனிய வாழ்வினை பாதியிலே கவர்ந்திழுத்திட்டானோ!

உம் இனிய உறவுகளாய் மனைவியவள் தேம்பியழ
உம்மவர் பிள்ளைகள் கதறியழ
உற்ற உறவுகள் பரிதவிக்க
சுற்றங்களை சோகத்திலாழ்த்திவிட்டு
மாயமாய் மறைந்ததேனோ!

சற்றும் எதிர்பாராத அன்னாரின் திடீர் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தாருக்கும் உற்றார் உறவினர்கள் நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

*விதியின் கணக்கை மாற்றிட எம்மால் முடியாதே அதனால் இவர் தம் பிரிவால் வாடும் குடும்பத்தினர் உறவினருக்கும் எங்கள் இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகிறோம்*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தலைவர், தி. இராசநாயகம், பணிப்பாளர்கள்
பணியாளர்கள், இல்லக் குழந்தைகள்
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மண்ணுலகில்
05 . 08 . 1954

விண்ணுலகில்
01 . 09 . 2015



அமரர்

## ஆறுமுகம் சிவஞானசெல்வன்

(செக்காலை வீதி, முக்கொம்பன், பூநகரி)

தவமென தரணியில் உதித்தவரே
பாச மொழிகள் பேசி பண்பாய் வளர்த்தவரே
பாரினிலே தவிக்கவிட்டு பாதியிலே சென்றதென்ன
உதயத்தின் அஸ்தமனம் உண்மையானதென்று
ஊமையாய்ச் சொல்கின்றோம்
விழியெனும் விருட்சங்கள் சொரியும்
கண்ணீர் புஷ்பங்கள் கண்ணீரில் கரைந்தாலும்
கலையாத நினைவுகளுடன்
ஆறாத்துயர் கொண்டு அழுது புலம்புகின்றோம்
ஆனாலும் உம் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி நிற்கின்றோம்...

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளர், பணியாளர்கள்
கிருபா லேணர்ஸ் - கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மண்ணுலகில்
05 . 08 . 1954

விண்ணுலகில்
01 . 09 . 2015



அமரர்

## ஆறுமுகம் சிவஞானசெல்வன்

[செக்காலை வீதி, முக்கொம்பன், பூநகரி]

தவமென தரணியில் உதித்தவரே
பாச மொழிகள் பேசி பண்பாய் வளர்த்தவரே
பாரினிலே தவிக்கவிட்டு பாதியிலே சென்றதென்ன
உதயத்தின் அஸ்தமனம் உண்மையானதென்று
ஊமையாய்ச் சொல்கின்றோம்
விழியெனும் விருட்சங்கள் சொரியும்
கண்ணீர் புஷ்பங்கள் கண்ணீரில் கரைந்தாலும்
கலையாத நினைவுகளுடன்
ஆறாத்துயர் கொண்டு அழுது புலம்புகின்றோம்
ஆனாலும் உம் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி நிற்கின்றோம்...

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளர், பணியாளர்கள்
கிருபா லேணர்ஸ் - கிளிநொச்சி

Print By: Maxico, Kilinochchi. 0768397472

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர்க் காணிக்கை...!



மலர்வு
17
07
1954

உதிர்வு
01
09
2015

எமது நண்பியின் அன்புத் தந்தையானு

அமரர்

## ஆறுமுகம் சிவஞானச்செல்வம்

(முக்கொம்பன், பூநகரி)

விழியினைத் திறந்து விடியல் காட்டி
வழி இதுவென வாழ்வு காட்டி
எல்லோருக்கும் இமையாக இருந்து
இறைவனடி சேர்ந்த — தந்தையே
உங்கள் பாசத்தால்
கவர்ந்த உள்ளங்கள் —இன்று
கண்ணீரில் மிதப்பதை
தவிர்க்க ஒரு கணம்
மீண்டும் கண் திறக்கமாட்டீரோ!

எமது நண்பி கௌசிகாவின் தந்தையாரின் பிரிவுத் துயரால் ஆழ்ந்திருக்கும்
அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்களின் பிரிவால் கலங்கும்
கௌசிகாவின் இணைபிரியா நண்பிகள்

தர்சினி, தர்மினி

வேலன் பதிப்பகம், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை...!

மண்ணில்
1954-07-17



விண்ணில்
2015-09-01

நல்லூர் பூநகரியைப் பிறப்பிடமாகவும் முட்கொம்பனை வசிப்பிடமாகவும் கொண்ட எமது அயல் கிராமமான முட்கொம்பன் கமக்கார அமைப்பின் 1972ம் ஆண்டு உறுப்பினரும், முட்கொம்பன் குளத்தின் தண்ணீர் விநியோகஸ்தரும், முன்னோடி விவசாயியுமான

அமரர்

## ஆறுமுகம் சிவஞானச்செல்வம்

உலகத்து வாழ்க்கைதனில்
உத்தமராய் வாழ்ந்தீர்கள்
அனைவருக்கும் மறக்கமுடியாத நல்ல
நினைவுகளைத் தந்தீர்கள்......
உறவுகள் ஓலமிட
ஊரவர்கள் கண்ணீர் மழை பொழிய
உங்கள் உயிரை காலனவன் பறித்தது
தான் ஏனோ.....
உங்கள் ஆத்மா சாந்திக்காய்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்திரணா இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

நேரடம்பன் கமக்கார அமைப்பு
நேரடம்பன், முட்கொம்பன்.


வேலன் பதிப்பகம், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் பகிர்கின்றோம்...!

மண் மகிழ்
1954-07-17

கண் நெகிழ்
2015-09-01



நல்லூர் பூநகரியைப் பிறப்பிடமாகவும் முட்கொம்பனை வசிப்பிடமாகவும் கொண்ட
முட்கொம்பன் கமக்கார அமைப்பின் 1972ம் ஆண்டு உறுப்பினரும்,
முட்கொம்பன் குளத்தின் தண்ணீர் விநியோகஸ்தரும், முன்னோடி விவசாயியுமான

அமரர்

## ஆறுமுகம் சிவஞானச்செல்வம்

வாழ்வின் வழிகாட்டியாய் பண்பின் இலக்கணமாய்
அன்பின் உறைவிடமாய்த் திகழ்ந்த உம்மை-
காலனவன் கவர்ந்தானோ ?
காலனவன் கவர்ந்தான் என்ற செய்தி கேட்டு
ஆற்றாது பதைபதைக்கும் நெஞ்சம் தனை -
நிலைப்படுத்த வழியேது
ஆற்றொனா இன்னலில் தவிக்கும் இக்குடும்பத்தை
தேற்றவும் வார்த்தையில்லை தவிக்கின்றோம் நாம்...!

இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

முட்கொம்பன் கமக்கார அமைப்பு
முட்கொம்பன், பூநகரி.

வேலன் பதிப்பகம், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர் சொரிகின்றோம்.!

மலர்வு
17-07-1954



உதிர்வு
01-09-2015

அமரர்

## ஆறுமுகம் சிவஞானச்செல்வம்

(முக்கொம்பன், பூநகரி)

அன்புக்கும் பண்புக்கும்
இலக்கணமாய்த் திகழ்ந்தீர்!
ஆதரவு மொழி பேசி
இன்முகத்துடன் வாழ்ந்தீர்!
நாளும் பழகிய நாட்களை
கனவாய் நினைப்பதா?
எங்கள் கண்ணீரை
உங்கள் பாதங்களில்
காணிக்கையாய் அர்ப்பணித்து
அஞ்சலி செய்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருற்றிருக்கும்
இவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நடராசா, சோதிநாதன், சுதாகரன்
குடும்பத்தினர்
யாழ்ப்பாணம்.

வேழன் பதிப்பகம், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் மலர்கள்...!



மண் மகிழ
1954-08-05

கண் நெகிழ
2015-09-01

நல்லூர் பூநகரியைப் பிறப்பிடமாகவும் செக்காலை வீதி, முக்கொம்பனை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# ஆறுமுகம் சிவஞானச்செல்வன்

ஞானத்தின் ஒளி விளக்காய்
நனி சிறக்க வாழ்ந்தவரே
நாடி வந்தோர்க்கு நன்மைகள் பல புரிந்தீர்
நற்செல்வங்களைப் பெற்று
நன்றாக வாழ வைத்தீர்
நாடறிந்த உமது புகழ்
நாளெல்லாம் நிலைத்து நிற்கும்.

இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

காளித்தாய் ஹாட்வெயார்
முக்கொம்பன், பூநகரி.

கேதீஸ் பதிப்பகம், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 1954 | | 2015 |
| * | | * |
| 07 |  | 09 |
| * | | * |
| 17 | | 01 |

பூநகரி நல்லூரை பிறப்பிடமாகவும் முக்கொம்பனை வசிப்பிடமாகவும் கொண்ட

**எமது அன்ப நண்பன்**

## அமரர். ஆறுமுகம் சிவஞான செல்வன்

*அன்பின் பண்பிடமாய் பாசத்தின் பிறப்பிடமாய்*
*அறிவிளக்கின் வழிகாட்டியாய் பரிணமித்த என் நண்பனே*
*சுமைகள் தனக்கென்றும் சுகமெல்லாம் எமக்கென்றும்*
*எளிமையான முகம் கொண்டு எதிரொளியாய் திகழ்ந்தவனே*
*சமூக நலனுக்காய் அரும்பாடு பட்டவனே*
*நீ சிந்திய வியர்வையும் என்னோடு கலந்த சுவாசமும்*
*தோழமையாய் வாழ்ந்த அந்த நினைவுகளும் எம்மை விட்டு நீங்காதய்யா*
*வையகம் போற்றும் காவலனே, என்றென்றும் உனை நாம் மறவோம்.*

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறேன்,

கண்ணீருடன்...துயர் பகிரும்

சுந்தரம் பாலசிங்கம் குடும்பத்தினர் (சின்ராசு)
சாமிப்புலம் பூநகரி

அபி மலரி சென்ரர் - சங்கத்தானை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் கலந்த இறுதி அஞ்சலி



மலர்வு
05
08
1954

உதிர்வு
01
09
2015

அமரர்

## ஆறுமுகம் சிவஞானசெல்வன்

(செக்காலை வீதி, முக்கொம்பன், பூநகரி)

ஓ! ஐயாவே எம் கண்ணீரை காணிக்கயாக்குகிறோம்
மண்ணுலக வாழ்வில் எண்ணங்கள் வண்ணங்கள்
எல்லாம் சிதைந்தனவே!
ஐயா!
உம் அருமை இப்புவி தன்னில் செப்ப முடியாது
உள்ளம் தனில் கள்ளமில்லா ஐயாவே!
வெள்ளம் போல மனம் கரைகிறது
நல்ல உள்ளம் வெல்லும்
சொன்னால் துயர் ஆறாது
ஓ! ஐயாவே........!

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளர், பணியாளர்கள்
மக்சிகோ பிரிண்டேர்ஸ் - கிளிநொச்சி.

Print By: Maxico, Kilinochchi. 0768397472

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் கலந்த இறுதி அஞ்சலி



மலர்வு
05
08
1954

உதிர்வு
01
09
2015

அமரர்
**ஆறுமுகம் சிவஞானசெல்வம்**
[செக்காலை வீதி, முக்கொம்பன், பூநகரி.]

தங்கமான மனசுனக்கு தங்கமே – இந்த
தரணி போற்ற வாழ்ந்த எம் நெஞ்சமே
சிங்கம் போன்ற மழலை பெற்று
சிறப்புடன் வாழ்கையிலே – நம்
அங்கமெல்லாம் நடுநடுங்க
அன்புருவே சென்றதேனோ
வங்கக்கடல் ஓய்ந்தாலும் – நம்
வாழ்வில் நீ ஓயமாட்டாய்.....

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**வரதன் லேனர்ஸ் - கிளிநொச்சி.**

Print By: Maxico, Kilinochchi. 0766397472

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
17 . 07 . 1954

மறைவு
01 . 09 . 2015



## அமரர்
## ஆறுமுகம் சிவஞானசெல்வம்
(முக்கொம்பன் பூநகரி)

காற்றலையில் வந்த செய்தி
காதுகளுக்குள் அக்கினிக் குழம்பாய்
நேற்றுவரை நேசமுடன் பழகிய
நினைவுகள் நெஞ்சு கனக்கிறது
கண்ணிமை கதவுகளை தட்டுகிறது
கால(ன்) நதி ஓட்டத்தில் - நீவீரும்
கரை சேரா ஓடமாய்.......
பயிலுகின்ற உள்ளங்கள் பரிதவிக்கின்றது நீர
துயிலுகின்ற துயரம் கண்டு.........

**ஆழ்ந்த கவலையைப் பகிர்ந்து கொள்கின்றோம்.**

ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்
சுடர் கல்வி நிலையம்
செக்காலை வீதி முக்கொம்பன் பூநகரி

edit by pc express electronic multi shop:-0778499148 vadiyady poonagary.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயக் காணிக்கை...!

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 1954 – 07 – 17 | | 2015 – 09 – 01 |



நல்லூர் பூநகரியைப் பிறப்பிடமாகவும் முட்கொம்பனை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

## ஆறுமுகம் சிவஞானச்செல்வம்

அன்பின் திருவுருவாய்
பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய்
குடும்பத்தை வழிநடத்திய
அன்புத் தெய்வமே
நிலையற்ற உலகிது என்று
நிஜம் தேடி விரைந்தீரோ........?

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மனைவி கமலேஸ்வரி
பிள்ளைகள் -
சஞ்சீவன், சுரேசன், கௌசல்யா, சயந்தன், கௌசிகா

வேழன் பதிப்பகம், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
| --- | --- | --- |
| 17 . 07 . 1954 |  | 01 . 09 . 2015 |

## அமரர்
## ஆறுமுகம் சிவஞானசெல்வம்
(முக்கொம்பன் பூநகரி)
அவர்கள்

கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து நீங்கள் விண்ணோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல் கன காலம் இருப்பீர்கள்!

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரிவால் வாடிநிற்கும்
மா.கதிரமலைப்பிள்ளை குடும்பத்தினர்
அளவெட்டி யாழ்ப்பாணம்

edit by pc express electronic multi shop:-0778499148 vadiyady poonagary.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை..!



காலனின் பிடியில்

01

09

2015

அன்னையின் மடியில்

17

07

1954

அமரர்

## ஆறுமுகம் சிவஞானச்செல்வம்

(முக்கொம்பன், பூநகரி)

முக்கொம்பன் வளர்த்தெடுத்த
தவப்புதல்வா – சிவஞானச் செல்வம்
அன்புக்கு பெருமகனாக
பண்புக்கு பரிவாளனாய்
சேவைக்கு திருமாறனாய்
அவதரித்த பெருமகனே
காலன் எனும் பிடியால்
அகப்பட்டு எங்கு சென்றீர்..?
காய்த்து பூத்து கலகலத்து
என்றும் இருக்க வைத்து
விம்மியழ வேரினிலே
விழுந்த இடி....
எம்மை மீளாத் துயரில் ஆழ்த்தி விட்டு
எங்கு சென்றீர்....!!!

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் இவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


ஓம் சாந்தி சாந்தி!! சாந்தி!!!

கிளி/முக்கொம்பன் ம.வி
கலைப்பிரிவு மாணவர்கள்
A/L - 2016

வேழன் பதிப்பகம், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர்க் காணிக்கை..!



மாலையிலே மடிந்துவிடுவேன் என்று தெரிந்தும்
காலையிலே நறுமணத்தோடு மலர்கின்ற மலர்களைப் போலே
என்றோ ஒருநாள் இறந்து விடுவேன் என்று அறிந்த பின்பும்
மனதிலே சலனங்கள் எதுவுமின்றி
வாழ்ந்து கொண்டிருப்பவன் தான் மனிதன்

அந்த மனிதரிலே இன்று இறைவன் திருவடியை அடைந்திருக்கின்ற
இந்த மனிதன் ஓராயிரம் வாசலுக்கு ஒளிதந்த தீபம்
கருணை உள்ளத்தோடு சன்மார்க்க நெறியிலே வாழ்ந்த ஒருபுண்ணிய சீலனை
எம் நெஞ்சம் நிறைந்த ஒரு வண்ண ஓவியத்தை
இன்று மின்னல் கொண்டு போய்விட்டது.

வேதனையின் விளிம்பில் நின்று இந்நேரத்திலே
அவரின் வாழ்க்கையின் சரிதத்தின் ஓரிரு வார்த்தைகளை
அவருடைய ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதிலே
நாங்கள் சிறிது ஆறுதல் அடைகின்றோம்.

மனிதனுடைய வாழ்க்கையில் கவலைகள் என்பதும்
சந்தோசம் என்பதும் மாறிமாறி வருவது தான் இயல்பு—ஆனால்
கவலை என்பதின் கடினத்தின் சாயலை
எங்களுடைய வாழ்நாளிலே அவர் முகத்திலே நாம் எப்போதும் கண்டதில்லை
அவர் முகம் வாடி இருப்பதை இப்போது தான் நாம் பார்க்கின்றோம்.

இவரைப் பற்றி இன்னும் சொன்னால்
முக்கொம்பன் மண்ணினுடைய முதுகெலும்பு
இவருடைய மறைவாலே இந்த மண்ணே மதிப்பிழந்து போய்விட்டது
இறுகிய காட்டிற்குள்ளே ஒரு குளம் இருப்பதைக் கண்டுபிடித்ததிலும்
அதன்பின்பு இந்த முக்கொம்பன் குடியேற்றத்திட்டத்தினை உருவாக்கியதில்
சிவஞானசெல்வனின் பங்கு நூறுவீதம் இருந்தது
என்பதை நாங்கள் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.
இவர் ஒரு சாதாரண மனிதன் அல்ல
ஒரு சாதனையாளனும் கூட
விவசாயத் துறையிலே விவசாயிகளுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக
விளங்கிய ஒரு சிறந்த விவசாயி அதுமட்டுமல்ல
அவருடைய இளமைக்காலம் என்பது அது வேறானது
சிறந்த ஒரு வலைப்பந்தாட்ட வீரன்
சிறந்த ஒரு சைக்கிள் ஓட்டவீரன்
பல வீரர்களோடு பலமுறை போட்டியிட்டு
பூநகரிப் பிரதேசத்துக்குப் பெருமை சேர்த்த வீரன்
அத்தோடு மனித நேயம் மனச்சாட்சி கருணை காருண்யம்
இப்படியான அற்புதமான மனிதப் பண்புகளைக் கொண்ட
மனிதனின் வாழ்வு நேற்றோடு மவுனிக்கப்பட்டு விட்டது.
இந்த நல்ல மனிதனின் நற்பண்புகளை
இவ்வேளையிலே சொல்லவில்லையானால்
நாங்கள் மனிதநேயம் அற்றவர்கள் என்றாகிவிடும்.
ஆகவே நாமும் அவர்போல் வாழ்வோம்.
உறவுகளே..!
உங்கள் துயரை நாமும் பகிர்ந்துகொள்வோம்.

அமரர்
## ஆறுமுகம் சிவஞானச்செல்வன்

மலர்வு
05.08.1954

உதிர்வு
01-09-2015

அவரின் பிரிவுத் துயரால் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அவரின் ஆத்ம சாந்திக்காக
ஆலங்கேணி நல்லூர் முக்கொம்பன் வாழ் உறவுகள் சார்பாக
கனோஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயக் காணிக்கை...!

தோற்றம் 1954 – 07 – 17

மறைவு 2015 – 09 – 01



நல்லூர் பூநகரியைப் பிறப்பிடமாகவும் முட்கொம்பனை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

## ஆறுமுகம் சிவஞானச்செல்வம்

அன்பின் திருவுருவாய்
பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய்
குடும்பத்தை வழிநடத்திய
அன்புத் தெய்வமே
நிலையற்ற உலகிது என்று
நிஜம் தேடி விரைந்தீரோ........?

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மனைவி கமலேஸ்வரி
பிள்ளைகள் -
சஞ்சீவன், சுரேசன், கௌசல்யா, சயந்தன், கௌசிகா

வேழன் பதிப்பகம், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
17 . 07 . 1954



உதிர்வு
01 . 09 . 2015

## அமரர்
## ஆறுமுகம் சிவஞானசெல்வம்
(முக்கொம்பன் பூநகரி)
அவர்கள்

கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்

எங்கள் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்

மண் விட்டு மறைந்து நீங்கள் விண்ணோக்கிச் சென்றாலும்

கண் விட்டு மறையாமல் கன காலம் இருப்பீர்கள்!

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரிவால் வாடிநிற்கும்

மா.கதிரமலைப்பிள்ளை குடும்பத்தினர்
அளவெட்டி யாழ்ப்பாணம்

edit by pc express electronic multi shop:-0778499148 vadiyady poonagary.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை..!



அன்னையின் மடியில்

17

07

1954

காலனின் பிடியில்

01

09

2015

அமரர்

## ஆறுமுகம் சிவஞானச்செல்வம்

(முக்கொம்பன், பூநகரி)

முக்கொம்பன் வளர்த்தெடுத்த
தவப்புதல்வா - சிவஞானச் செல்வம்
அன்புக்கு பெருமகனாக
பண்புக்கு பரிவாளனாய்
சேவைக்கு திருமாறனாய்
அவதரித்த பெருமகனே
காலன் எனும் பிடியால்
அகப்பட்டு எங்கு சென்றீர்..?
காய்த்து பூத்து கலகலத்து
என்றும் இருக்க வைத்து
விம்மியழ வேறினிலே
விழுந்த இடி....
எம்மை மீளாத் துயரில் ஆழ்த்தி விட்டு
எங்கு சென்றீர்....!!!

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் இவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


ஓம் சாந்தி சாந்தி!! சாந்தி!!!

கிளி/முக்கொம்பன் ம.வி
கலைப்பிரிவு மாணவர்கள்
A/L - 2016

வேலன் பதிப்பகம், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர்க் காணிக்கை..!



மாலையிலே மடிந்துவிடுவேன் என்று தெரிந்தும்
காலையிலே நறுமணத்தோடு மலர்கின்ற மலர்களைப் போலே
என்றோ ஒருநாள் இறந்து விடுவேன் என்று அறிந்த பின்பும்
மனதிலே சலனங்கள் எதுவுமின்றி
வாழ்ந்து கொண்டிருப்பவன் தான் மனிதன்

அந்த மனிதரிலே இன்று இறைவன் திருவடியை அடைந்திருக்கின்ற
இந்த மனிதன் ஓராயிரம் வாசலுக்கு ஒளிதந்த தீபம்
கருணை உள்ளத்தோடு சன்மார்க்க நெறியிலே வாழ்ந்த ஒருபுண்ணிய சீலனை
எம் நெஞ்சம் நிறைந்த ஒரு வண்ண ஓவியத்தை
இன்று மின்னல் கொண்டு போய்விட்டது.

வேதனையின் விளிம்பில் நின்று இந்நேரத்திலே
அவரின் வாழ்க்கையின் சரிதத்தின் ஓரிரு வார்த்தைகளை
அவருடைய ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதிலே
நாங்கள் சிறிது ஆறுதல் அடைகின்றோம்.

மனிதனுடைய வாழ்க்கையில் கவலைகள் என்பதும்
சந்தோசம் என்பதும் மாறிமாறி வருவது தான்இயல்பு—ஆனால்
கவலை என்பதின் கடினத்தின் சாயலை
எங்களுடைய வாழ்நாளிலே அவர் முகத்திலே நாம் எப்போதும் கண்டதில்லை
அவர் முகம் வாடி இருப்பதை இப்போது தான் நாம் பார்க்கின்றோம்.

இவரைப் பற்றி இன்னும் சொன்னால்
முக்கொம்பன் மண்ணினுடைய முதுகெலும்பு
இவருடைய மறைவாலே இந்த மண்ணே மதிப்பிழந்து போய்விட்டது
இறுகிய காட்டிற்குள்ளே ஒரு குளம் இருப்பதைக் கண்டுபிடித்ததிலும்
அதன்பின்பு இந்த முக்கொம்பன் குடியேற்றத்திட்டத்தினை உருவாக்கியதில்
சிவஞானசெல்வனின் பங்கு நூறுவீதம் இருந்தது
என்பதை நாங்கள் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.
இவர் ஒரு சாதாரண மனிதன் அல்ல
ஒரு சாதனையாளனும் கூட
விவசாயத் துறையிலே விவசாயிகளுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக
விளங்கிய ஒரு சிறந்த விவசாயி அதுமட்டுமல்ல
அவருடைய இளமைக்காலம் என்பது அது வேறானது
சிறந்த ஒரு வலைப்பந்தாட்ட வீரன்
சிறந்த ஒரு சைக்கிள் ஓட்டவீரன்
பல வீரர்களோடு பலமுறை போட்டியிட்டு
பூநகரிப் பிரதேசத்துக்குப் பெருமை சேர்த்த வீரன்
அத்தோடு மனித நேயம் மனச்சாட்சி கருணை காருண்யம்
இப்படியான அற்புதமான மனிதப் பண்புகளைக் கொண்ட
மனிதனின் வாழ்வு நேற்றோடு மவுனிக்கப்பட்டு விட்டது.
இந்த நல்ல மனிதனின் நற்பண்புகளை
இவ்வேளையிலே சொல்லவில்லையானால்
நாங்கள் மனிதநேயம் அற்றவர்கள் என்றாகிவிடும்.
ஆகவே நாமும் அவர்போல் வாழ்வோம்.
உறவுகளே..!
உங்கள் துயரை நாமும் பகிர்ந்துகொள்வோம்.

அமரர்

## ஆறுமுகம் சிவஞானச்செல்வன்

மலர்வு
05 08 1954

உதிர்வு
01-09 -2015

இவரின் பிரிவுத் துயரால் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அவரின் ஆத்ம சாந்திக்காக
ஆலங்கேணி நல்லூர் முக்கொம்பன் வாழ் உறவுகள் சார்பாக
கனேஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மண்ணுலகில்

27 . 07 . 1954



விண்ணுலகில்

01 . 09 . 2015

அமரர்

## ஆறுமுகம் சிவஞ்ஞானச்செல்வம்

(முக்கொம்பன், பூநகரி)

அமைதியின் வடிவம் - இன்று
அமைதியில் உறைந்ததேனோ?
அன்பதன் உருவம் - இங்கு
அசைவின்றி துயில்வதேனோ?
இப்புவிதன்னில் வாழ்வு
இவ்வளவே என்றிட்டாலும்
ஒப்புதல் கொள்ள நெஞ்சம்
ஒருபோதும் முடிவதில்லை
மானிடராய்ப் பிறத்தல்
அரிதினும் அரிதென்றாலும்
மானுடம் போற்ற வாழ்தல்
அதை விட அரிதாமன்றோ!
மண்ணிலே ஐயா
மற்றவர் போற்ற வாழ்ந்தார்...
என்றுமே எல்லோருள்ளும்
இனியராய் உயிர்த்திருப்பார்...

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

திலக் சாரதிப் பயிற்சிப் பாடசாலை - கிளிநொச்சி
உரிமையாளர், பணியாளர்கள்.

Print By: Maxico. Kilinochchi. 0768397472

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்:-1954.07.17 மறைவு:-2015.09.01

## ஆறுமுகம் சிவஞானச்செல்வம்
## (முட்கொம்பன் பூநகரி)

*இதயத்தின் தூறலில்*
*உயிர்ப்பிழந்து போனது*
*நேற்றிருந்த உறவு ஒன்று*
*இன்று முடிந்து போனது*
*காத்திருந்த உறவு*
*கண் விழித்துப் பாத்திருக்க*
*பாத்திருந்த மரணம்*
*பரிதவிக்கச் செய்தது*
*பேச்சிழந்து புலம்புகின்றோம்–புலம்பியொரு*
*வார்த்தை உன்னிடத்துத் தேடுகிறோம்*
*கண்ணிருக்க மணியில்லை – காற்றிருக்க*
*உயிரில்லை – இங்கே உறவிருக்க*
*நீர் அருகில்லை– உம்*
*நினைவோடு நாமும் வாழ்வோமே.*

**பிரிவால் வாடிநிற்கும்**

டிலான் பல்பொருள் வாணிபம் (சங்கர்)

வாடியடி பூநகரி.

edit by pc express electronic multi shop:-0778499148, 0212060815 vadiyady poonagary.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர் சொரிகின்றோம்...!

மண்ணில்
1954 - 05 - 08



விண்ணில்
2015 - 09 - 01

நல்லூர் பூநகரியைப் பிறப்பிடமாகவும் முட்கொம்பனை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்



# ஆறுமுகம் சிவஞானச்செல்வம்

விழிகள் கரைகிறதே...
வேதனை நெஞ்சை முட்டுகிறதே...
ஓடி ஓடி திரிந்து உலாவிய இதயம்
நிரந்தரமாய் உறங்கியதேன்?
உம் பிரிவின் துயரச் செய்தி கேட்டு
காற்று வீச மறுக்கிறதே
வாய்பேச மறுக்கிறதே
உம் பாசத்தால்
கவர்ந்த உள்ளங்கள் இன்று
கண்ணீரில் மிதப்பதை
தவிர்க்க ஒரு கணம்
மீண்டும் கண்திறக்க மாட்டீரோ?



இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**சு. பரமேஸ்வரன் குடும்பத்தினர்**
**ஆலங்கேணி, பூநகரி.**

வேழன் பதிப்பகம், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை..!



மண்ணில்
17-07-1954

விண்ணில்
01-09-2015

அன்பு கொண்ட உங்கள் உயிர்
எம்மை விட்டு போனதே!
ஆலமரம் சாய்ந்ததினால் விழுதுகள்
இங்கு வாடுகின்றதே!
இனிய உங்கள் அன்புக்குரல்
நிதமும் காதில் ஒலிக்கின்றதே!
தனித்து எமை வாழவிட்டு இன்று நீங்கள்
போனதுவும் நியாயமா!
உறவுகள் எத்தனை இருந்தென்ன
உலகிலே தேறுதலால் ஒருபோதும்
தேறிடாது - எம்மனம்
தேடினாலும் காண்போமா உங்கள்
இனியமுகத்தினை...!

இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் இவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அமரர்
## ஆறுமுகம் சிவஞானச்செல்வம்
(முட்கொம்பன், பூநகரி)

குணசீலன்
இந்துஷன் அரைக்கும் ஆலை
முட்கொம்பன் , பூநகரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மண்ணுலகில்

27 . 07 . 1954



விண்ணுலகில்

01 . 09 . 2015

## அமரர்
# ஆறுமுகம் சிவஞ்ஞானச்செல்வம்

(முக்கொம்பன், பூநகரி)

அமைதியின் வடிவம் - இன்று
அமைதியில் உறைந்ததேனோ?
அன்பதன் உருவம் - இங்கு
அசைவின்றி துயில்வதேனோ?
இப்புவிதன்னில் வாழ்வு
இவ்வளவே என்றிட்டாலும்
ஒப்புதல் கொள்ள நெஞ்சம்
ஒருபோதும் முடிவதில்லை
மானிடராய்ப் பிறத்தல்
அரிதிலும் அரிதென்றாலும்
மானுடம் போற்ற வாழ்தல்
அதை விட அரிதாமன்றோ!
மண்ணிலே ஐயா
மற்றவர் போற்ற வாழ்ந்தார்...
என்றுமே எல்லோருள்ளும்
இனியராய் உயிர்த்திருப்பார்...

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

திலக் சாரதிப் பயிற்சிப் பாடசாலை - கிளிநொச்சி
உரிமையாளர், பணியாளர்கள்.

Print By: Maxico, Kilinochchi 0768397472

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்:-1954.07.17 மறைவு:-2015.09.01

## ஆறுமுகம் சிவஞானச்செல்வம்
(முட்கொம்பன் பூநகரி)

*இதயத்தின் தூறலில்*
*உயிர்ப்பிழந்து போனது*
*நேற்றிருந்த உறவு ஒன்று*
*இன்று முடிந்து போனது*
*காத்திருந்த உறவு*
*கண் விழித்துப் பாத்திருக்க*
*பாத்திருந்த மரணம்*
*பரிதவிக்கச் செய்தது*
*பேச்சிழந்து புலம்புகின்றோம்–புலம்பியொரு*
*வார்த்தை உன்னிடத்துத் தேடுகிறோம்*
*கண்ணிருக்க மணியில்லை – காத்திருக்க*
*உயிரில்லை – இங்கே உறவிருக்க*
*நீர் அருகில்லை– உம்*
*நினைவோடு நாமும் வாழ்வோமே.*

**பிரிவால் வாடிநிற்கும்**
டிலான் பல்பொருள் வாணிபம் (சங்கர்)
வாடியடி பூநகரி.

edit by pc express electronic multi shop:-0778499148, 0212060815 vadiyady poonagary.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விழிநீர் சொரிகின்றோம்...!

மண்ணில்
1954 – 05 – 08



விண்ணில்
2015 – 09 – 01

நல்லூர் பூநகரியைப் பிறப்பிடமாகவும் முட்கொம்பனை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்



# ஆறுமுகம் சிவஞானச்செல்வம்

விழிகள் கரைகிறதே...
வேதனை நெஞ்சை முட்டுகிறதே...
ஓடி ஓடி திரிந்து உலாவிய இதயம்
நிரந்தரமாய் உறங்கியதேன்?
உம் பிரிவின் துயரச் செய்தி கேட்டு
காற்று வீச மறுக்கிறதே
வாய்பேச மறுக்கிறதே
உம் பாசத்தால்
கவர்ந்த உள்ளங்கள் இன்று
கண்ணீரில் மிதப்பதை
தவிர்க்க ஒரு கணம்
மீண்டும் கண்திறக்க மாட்டீரோ?



இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**சு. பரமேஸ்வரன் குடும்பத்தினர்**
**ஆலங்கேணி, பூநகரி.**

வேழன் பதிப்பகம், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை.!



மண்ணில்
17-07-1954

விண்ணில்
01-09-2015

அமரர்
## ஆறுமுகம் சிவஞானச்செல்வம்
(முட்கொம்பன், பூநகரி)

அன்பு கொண்ட உங்கள் உயிர்
எம்மை விட்டு போனதே!
ஆலமரம் சாய்ந்ததினால் விழுதுகள்
இங்கு வாடுகின்றதே!
இனிய உங்கள் அன்புக்குரல்
நிதமும் காதில் ஒலிக்கின்றதே!
தனித்து எமை வாழவிட்டு இன்று நீங்கள்
போனதுவும் நியாயமா!
உறவுகள் எத்தனை இருந்தென்ன
உலகிலே தேறுதலால் ஒருபோதும்
தேறிடாது - எம்மனம்
தேடினாலும் காண்போமா உங்கள்
இனியமுகத்தினை...!

இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் இவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குணசீலன்
இந்துஷன் அரைக்கும் ஆலை
முட்கொம்பன் , பூநகரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி...!



மண்ணில்
17
07
1954

விண்ணில்
01
09
2015

அமரர்

# ஆறுமுகம் சிவஞானச்செல்வம்

பெரும் தூரப் பயணத்தில்
பாதிவழியில் பயணத்தை முடித்து
எம்மை விட்டு சென்றதேனோ..?
பூநகரியின் செல்வப்புதல்வனே
சிவஞானச்செல்வம்
குடும்பத்தின் விடிவெள்ளியாய்
அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய்
திகழ்ந்தீரே!
பாசத்தை ஊட்டி பாதிவழியில்
கைவிட்டு மீளாத்துயில் கொண்டதேனோ!
கறையில்லா உங்கள் அன்பு மறுபிறப்பிலும்
கிடைத்திடவேண்டும்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் இவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
ஆசிரியர் - சு. பாக்கியராஜ்
தனு கல்வி நிலையம் - முக்கொம்பன்

வேழன் பதிப்பகம், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் மலர்கள்...!



மண் மகிழ
1954-07-17

கண் நெகிழ
2015-09-01

நல்லூர் பூநகரியைப் பிறப்பிடமாகவும் முட்கொம்பனை வசிப்பிடமாகவும் கொண்ட
எமது நண்பன் சயந்தன் அவர்களின் அன்புத் தந்தை

அமரர்

## ஆறுமுகம் சிவஞானச்செல்வம்



பாசத்தைப் பயிராக்கி நேசத்தை உறவாக்கி
நேர்மையுடன் வாழ்ந்த எங்கள் நண்பனின் தந்தையே
காலத்தை வீணாக்காது கம்பீர நடையுடன் உமது
வாழ்நாளைப் போக்கி வந்தீரே
அறுபத்தி ஒரு வருடங்களாய்
எல்லோருடனும் இனிமையாய் பழகி
எம்மையும் இனிதாய் வழி நடத்தி வந்தீர்
உள்ளத்தை ஒருங்கிணைத்து
ஒற்றுமையை வலுப்படுத்தி
உமக்கென சில உறவுகளையும் உருவாக்கி வந்தீரே
இவற்றையெல்லாம் செய்து விட்டு எங்களுடன்
இருக்காமல் இறைவனின் அரவணைப்பை
எளிதில் நாடிச் சென்றதேனோ அப்பா...!

இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

சயந்தனின் நண்பர்கள்
ரமணன், பகீரதன், அனோசன்

சோழன் பதிப்பகம், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரப் பூக்கள்...!



மண்ணில்
1954-07-17

விண்ணில்
2015-09-01

நல்லூர் பூநகரியைப் பிறப்பிடமாகவும் முட்கொம்பனை வசிப்பிடமாகவும் கொண்ட
எமது நண்பி கௌசியா அவர்களின் அன்புத் தந்தை

அமரர்

# ஆறுமுகம் சிவஞானச்செல்வம்

நெஞ்சம் துடிக்கிறது உள்ளம் குமுறுகிறது
உங்கள் சேவைக்காய் ஏங்குகிறது நெஞ்சம்
மீண்டும் வருவீரோ தொண்டு செய்வீரோ
இறைவனிடம் கேட்கிறோம் உங்கள் மீள்பிறப்பிற்கு
உண்மைக்கும், சேவைக்கும் உழைத்திட்ட தோழியின் தந்தையே
உம் ஆத்ம சாந்திக்கு எம் கண்ணீர்ப் பூக்களை
காணிக்கையாக்குகின்றோம்....!

அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் கலங்கும்
தரம் -10 மாணவர்கள்
கிளி/ முட்கொம்பன் அ.த.க. பாடசாலை

வேழன் பதிப்பகம், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி...!

மலர்வு
17-07-1954



உதிர்வு
01-09-2015

அமரர்

## ஆறுமுகம் சிவஞானச்செல்வம்

(முட்கொம்பன், பூநகரி)

கண்கள் பனிக்கிறது
இதயம் கனக்கிறது
மனமோ பதை பதைக்கிறது
துடிப்பான உன் பேச்சும்
துள்ளியமான உன் பரிவையும்
துவண்டு போகாத உன் முயற்சிகளும்
துண்டாடப்பட்டதை நினைக்கையில்
துடித்துப்போகின்றதே
எம் நெஞ்சு......?

இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் இவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கிராம அபிவிருத்திச் சங்கம் (RDS)
முட்கொம்பன், பூநகரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்



01-09-2015 அன்று அகால மரணமடைந்த எமது குடும்பத் தலைவன் அமரர் ஆறுமுகம் சிவஞானச்செல்வம் அவர்கள் விபத்தில் சிக்குண்ட போது உடன் ஓடிவந்து உதவிகள் செய்தவர்களுக்கும்,வைத்தியசாலைக் கருமங்களுக்கு உதவிகள் செய்தவர்களுக்கும், உடன் ஓடி வந்து எங்கள் துன்பத்தில் பங்கு கொண்ட அயலவர்க்கும், உறவினர்களுக்கும் நண்பர்கள் அனைவருக்கும், நேரில் சமூகமளிக்கமுடியாத நிலையில் தொலை பேசி மூலம் வெளிநாட்டில் இருந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்களை வெளியிட்டு துயரில் கலந்து கொண்ட அனைவருக்கும் பதாகை அடித்து துயரில் பங்கு கொண்டோருக்கும் அனைத்து வழிகளிலும் உதவிய அன்புநெஞ்சங் களுக்கும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டோர் அந்தியேட்டி கிரியைகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்ட அனைத்து உறவுகளுக்கும் இம்மலரை அழகுற அச்சிட்ட கிளிநொச்சி மல்ரிகலர் பதிப்பகத்தாருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா வழி

ஆறுமுகம் + பாக்கியம்

↓

✦ சிவஞானச்செல்வன்

ஞானேஸ்வரி + ஏகாம்பரநாதன் ✦

புனிதாம்பிகை + நவேந்திரராசா

✦ பாலசிங்கம்

ஞானாம்பிகை + கனகரத்தினம்

✦ விக்னேஸ்வரன்

✦ கேதீஸ்வரன்

✦ தனபாலசிங்கம்

✦ கலைச்செல்வன்

குமாரசாமி + அன்னலட்சுமி

↓

✦ ஏகாம்பரநாதன் + சரஸ்வதி

சுப்பிரமணியம் + இராஜேஸ்வரி

அமிர்தலிங்கம் இராஜேஸ்வரி

சண்முகலிங்கம் + புவனேஸ்வரி

சோதிநாதன் + சிவமலர்

கமலேஸ்வரி

பரமேஸ்வரன் + விமலேஸ்வரி

சிவஞானச்செல்வன்

\+

கமலேஸ்வரி

↓

சஞ்சீவன்

சுரேசன்

கௌசல்யா + கிருதாப் (சங்கர்)

சயந்தன்

கௌசியா

✦ அமரர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றவருடையதாகின்றது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாரம்சமுமாகும்.

-பகவான் ஸ்ரீ கிருஸ்ணர்-



Multy Colours Printers
KILINOCHCHI

தமிழ்-01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org